இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்,

சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை:- திரு.S.முத்துராமன், B.L., தீர்ப்பாய நடுவர்,

2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், ஆடி மாதம் 28 ம் நாள்

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ம் நாள் வியாழக்கிழமை

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.08/2023

CNR No.TNTV05-000654-2022

தெய்வக்கனி .... மனுதாரர்

எதிராக

1. துரைராஜ்
2. சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்.,

திருச்சிராப்பள்ளி -620 001.

.........எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது கடந்த 15.07.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.தமிழரசன் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பொன்னுலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.P.மதியழகன் அவர்கள் ஆஜராகி வக்கலாத்து தாக்கல் செய்துள்ள நிலையிலும் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் தோன்றாத்தரப்பினராக அறிவிக்கப்பட்டும், இருதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணையிலிருந்து வந்து இன்று (13.8.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

உத்தரவு

கடந்த 04.03.2022 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.10,00,000/-ஐ பின்வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் எதிர்மனுதாரர்களிடமிருந்து கிடைக்கக்கோரி 1988 மோட்டார் வாகன சட்டம் பிரிவுகள் 163(A) மற்றும் 166-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான தேதி	15.12.2022
உத்தரவு நாள்	13.08.2026
இழப்பீட்டுத்தொகை	ரூ.1,75,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்)
வட்டிவிகிதம் மற்றும் செலுத்தப்படவேண்டிய காலம்	கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதியான 03.01.2023 லிருந்து ரூ.1,75,000/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் அவருடைய வங்கி கணக்கிலிருந்து இந்த தீர்ப்பாயத்திற்கு கணக்கு எண். A/c 42904196244 State Bank of India Mannargudi (IFSC Code N 0000872) வங்கியிலுள்ள இந்நீதிமன்ற கணக்கில் பணத்தை வைப்பீடு செய்துவிட்டு இதே வழக்கு நடவடிக்கையில் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம் என்றும், அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றும், மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர் தன்னுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணத்தை உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. .மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண். C.R.P.No.1343 of 2012

	நாள். 02.06.2016 MD TNSTC Salem Ltd., Versus Chinnadurai என்ற இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி 2ம் எதிர்மனுதாரர் TDS க்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.
மொத்த நீதிமன்ற கட்டணம்	ரூ.1122.50
செலுத்திய நீதிமன்ற கட்டணம்	ரூ.372.50
மனுதாரர் செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம்	ரூ.(750.00/- மட்டும்)
நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கான காலம்	மனுதாரர் இம்மனுவிற்காக செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணமான ரூ.750/-ஐ உத்தரவு தேதியான 13.08.2026 லிருந்து 10 நாட்கள் காலகெடுவிற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.
மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா	இல்லை

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் 19 வயது நிரம்பியவர் என்றும், மாணவர் என்றும், கடந்த 04.03.2022 ம் தேதியன்று மதியம் 2.30 மணிக்கு திருச்சி - சென்னை NH ரோடு, கொணலை VIP சூப்பர் சிட்டி அருகே சாலை விதிகளை அனுசரித்து TN 50 AS 4178 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தில் கவனமாக தகப்பனார் சக்திவேல் ஓட்ட பின்னால் உட்கார்ந்து சென்று கொண்டிருந்தபோது அதுசமயம் வந்த TN 48 AL 7711 பதிவெண் கொண்ட மினி வேனை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீதும், மோதியதில் இருச்சக்கர வாகனத்துடன் கீழே விழுந்துவிட்டதாகவும் விபத்தில் உடம்பில் பல இடங்களில் காயம் ஏற்பட்டது என்றும் குறிப்பாக தனக்து வலது கால் தொடையில் எலும்பு முறிந்தும், மற்றும் வலது காலில் வீக்க காயம் ஏற்பட்டன என்றும், அடிப்பட்ட மனுதாரரை திருச்சி அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டு முதலுதவி

செய்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை அனுப்பி வைக்கப்பட்டு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 05.03.2022 முதல் 24.03.2022 ம் தேதி வரை சிகிச்சை பெற்றும் அதன் பின்னர் விடுவிக்கப்பட்டு நாளது வரை தனியார் மருத்துவமனையில் வெளிநோயளியாக சிகிச்சை பெற்று வருவதாகவும், விபத்திற்கு முன்பு திடகாத்திரமாகவும், சுறுசுறுப்பாகவும், ஆரோக்யமாகவும், செயல்பட்டு வந்தும், விபத்தில் ஏற்பட்ட காயங்களால் எந்த வேலையும் சரியாக செய்ய முடியவில்லை என்றும், வலது கால் தொடையில் ஏற்பட்ட எலும்பு முறிவின் காரணமாக அதிக நேரம் நிற்கவோ, நடக்கவோ சம்மணம் போட்டு உட்காரவோ முடியவில்லை என்றும், தீராத வலியும் தொந்தரவும் இருந்து வருவதால் விபத்தில் ஏற்பட்ட காயங்களால் பெருத்த மனைஉளைச்சலுக்கும், மனத்துன்பத்திற்கும் ஆளாகி உள்ளதால் எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ, தனித்தனியாகாவோ ரூ.10,00,000/-ம் இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

3. **<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>**

மனுதாரருடைய மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர் விபத்து குறித்தும், அதனால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தை குறித்தும் மறுக்கிறார் என்றும், விபத்தானது இந்த மனுதாரர் ஓட்டிச் சென்ற இருச்சக்கர வாகனத்தின் கவனக்குறைவாலேயே ஏற்பட்டுள்ளது என்று 1ம் எதிர்மனுதாரரால் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இந்த மனுதாரரே 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் கவனக்குறைவாக மோதியதாகவும் முதல் தகவல் அறிக்கையில் காணப்படும் நிலையில் அதை முற்றிலும் மறைத்து மனுவில் ஏதோ அவர் நிதானத்துடன் ஓட்டியதாகவும், 1ம் எதிர்மனுதாரர் தான் TN 48 AL 2711 என்ற வேனை கவனக்குறைவாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று பொய்யாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது என்றும், எனவே இந்த எதிர்மனுதாரரை பொறுத்து மனு நிலைக்கதக்கதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. பிரதான மனுவில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வக்கலாத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

5. பிரச்சனை:-

1. இந்த மனுதாரருக்கு மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை சட்டப்படி கிடைக்கக்கூடியதா?

2. எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்களா ?

3. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் சரியான இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

4. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

6. மனுவில் மனுதாரர் தரப்பில் தெய்வக்கனி என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிப்புரியும் கிஷோத்குமார் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், அவர் மூலம் சா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. **எழுவினாக்கள் 1 மற்றும் 2 க்கான தீர்வு** :-

எழுவினாக்கள் 1 மற்றும் 2 ஒன்றையொன்று சார்ந்த எழுவினாக்கள் என்பதாலும், தீர்மானிக்கவேண்டிய சங்கதிகள் ஒரே சங்கதிகள் என்பதாலும், இந்த 1, 2 எழுவினாக்களை ஒருசேர தீர்மானிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுதாரர் தன் தரப்பில் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையானது இந்த மனுதாரரின் தகப்பனார் சக்திவேல் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் இந்த மனுதாரர் தகப்பனார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு முரணாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக முதல் தகவல் அறிக்கை என்பது முதலில் பெறப்படும் தகவலை கொண்டு பதிவு செய்யப்படும் ஒரு பதிவாகும். அது

கொடுக்கப்படும் அந்த நபருடைய முந்தைய Statement மட்டுமே. குற்ற வழக்குகளில் முதல் தகவல் அறிக்கையை பொறுத்தமட்டில் இந்திய சாட்சிய சட்டம் 157-ன் கீழ் உறுதிப்படுத்தவோ பிரிவு 145-ன் கீழ் முரண்படுத்தவோ மட்டும் பயன்படுத்தப்படும் ஆவணம் ஆகும். முதல் தகவல் அறிக்கை ஒரு Substantial Evidence அல்ல,. 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த தகவல் அடிப்படையில் மனுதாரர் தகப்பனார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தாலும், மனுதாரரின் தகப்பனார் சக்திவேல் குற்றவாளியாக ஆக்கப்பட்டிருந்தாலும் முதல் தகவல் அறிக்கை மட்டுமே அதற்கான ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியாது. மேலும் மோட்டார் வாகன நடவடிக்கை என்பது கிரிமினல் வழக்குகளில் பரிசீலிக்கப்படும் சந்தேகத்தின் பலன் என்ற பொருண்மை இங்கு பரிசீலிக்க முடியாது. Preponderance of probability அதாவது நிகழ்தகவுகளின் மேலோங்கள் என்ற ஒரு விதி மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். Bimla Devi Vs. Himachal Road Transport Corporation 2009(13) SCC 530-ல் தீர்மானிக்கப்பட்டது போல மோட்டார் வாகன விபத்து வழக்குகளில் சாட்சிய சட்டதின் கண்டிப்பான விதிகள் பின்பற்ற வேண்டியதில்லை என்றும், relaxed standard of proof மட்டும் போதுமென்று தெரிவித்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள முதல் தகவல் அறிக்கையை பொறுத்தமட்டில் குற்றப்பத்திரிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா? குற்ற வழக்கு நிலுவையில் உள்ளதா? என்பது பொறுத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் CMA Nos. 3154 of 2021 & 1797 of 2022 and CMP No.12964 of 2022 in CMP No.1797 of 2022, dated 29.01.2025-ல் வழங்கிய தீர்ப்பு அன்று நெருங்கிய உறவினர்கள் சாட்சிகளாக இருக்கும்நிலையில் அதை பொறுத்து வழக்கு சந்தேகத்திற்குரிய ஒன்றாக இருப்பது போலவும் மேலும் முதல் தகவல் அறிக்கையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையையும் தெரிவித்துள்ளது. இந்த எதிர்மனுதாரர் தெரிவித்த மேலே சொன்ன உத்தரவு இந்த வழக்கின் தன்மைக்கு பொருந்தாது. இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு வழக்கும் அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிகள் ஆவணங்கள் மற்றும் பொருண்மைகளின் அடிப்படையிலேயே முடிவு செய்ய வேண்டும் என்பதால் 1ம் எதிர்மனுதாரர் ஆஜராகி மறுதளிப்பு செய்யாத நிலையில் 2ம் எதிர்மனுதாரரே இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், அதை 1ம் எதிர்மனுதாரர் மீது வசூல் செய்து கொள்ளலாம் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

8) **<u>எழுவினா.3 க்கான தீர்வு:-</u>**

8.1) இமனுதாரருக்கு கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் சரியான இழப்பீட்டுத் தொகை என்ன என்பதாகும்.

8.2) இம்மனு விபத்தினால் காயமுற்ற மனுதாரருக்கு காயத்தின் தன்மையை கொடுங்காயம் என்றும், அவருக்கு நீதிமன்ற சான்றாவணம் 1-ன் மூலம் ஏற்பட்ட ஊனத்தின் மதிப்பு 8% என்று தெரிகிறது. இந்த மனுதாரர் விபத்து சமயத்தில் பள்ளி மாணவராக இருந்து வருவதால் அவருக்கு வருமான இழப்பு என்று எதுவும் முடிவு செய்ய இயலாது. தனக்கு ஏற்பட்ட விபத்து காரணமாக முதலில் திருச்சி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு பின்னிட்டு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 05.03.2022 முதல் 24.03.2022 வரை சிகிச்சை எடுத்ததாக கூறியுள்ளார். ஊனத்தை பொறுத்தமட்டில் ஒரு சதவீத ஊனத்திற்கு ரூ.10,000/-ம் என்ற அடிப்படையில்8x10000=ரூ.80,000/-ம் வழங்கலாம் என்றும், விபத்தினால் ஏற்பட்ட மனஅதிர்ச்சி, வேதனை மற்றும் வலிக்கு ரூ.75,000/-ம் வழங்கலாம் என்றும், போக்குவரத்து செலவிற்கு ரூ.10,000/-ம், ஊட்டச்சத்து மற்றும் உதவிக்கு ஆள்வைத்த வகைக்கு ரூ.10,000/-ம், என்றும் முடிவு செய்யப்படுகிறது. ஆக மொத்தம் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.1,75,000/- வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

1.	**மனவேதனை மற்றும் வலிக்கு இழப்பீடு**	**ரூ.**	**75,000.00**
2.	**போக்குவரத்திற்கான இழப்பீடு**	**ரூ.**	**10,000.00**
3.	**ஊனத்திற்கான இழப்பீடு**	**ரூ.**	**80,000.00**
4.	**ஊட்டச்சத்து மற்றும் உதவிக்கு ஆள்வைத்த வகைக்கு இழப்பீடு**	**ரூ.**	**10,000.00**
	ஆக மொத்தம்	**ரூ.**	**1,75,000.00**

ஆகவே மேற்கண்ட தலைப்புகளின் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.1,75,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) கிடைக்கத்தக்கது என்றும், 2 ம் எதிர்மனுதாரர் மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும் இத்தீர்ப்பாயம் எழுவினா 3 க்கு முடிவு காண்கிறது.

9) <u>எழுவினா.4 :-</u>

வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மனுதாரருக்கு செலவுத் தொகையும், இழப்பீட்டுத் தொகையுடன் 7.5% வட்டித் தொகையும் கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

10) மேற்படி தொகைக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் 2016(2)TN MAC 71 என்ற கீழ்க்கண்ட வழக்கில் முன் தீர்ப்பு வழங்கியுள்ளது. The Managing Director, Tamil Nadu State Transport Corporation (Salem) Ltd., Bharathipuram, Dharmapuri /v/ Chinnadurai. ஆகவே, மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி இழப்பீட்டு தொகைக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் எனவும் இத்தீர்ப்பாயம் உத்தரவிடப்படுகிறது.

11) இறுதியாக, மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டும், ரூ.1,75,000/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடாக மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (03.01.2023) முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் அவருடைய வங்கி கணக்கிலிருந்து இந்த தீர்ப்பாயத்திற்கு கணக்கு எண். A/c 42904196244 State Bank of India Mannargudi (IFSC Code N 0000872) வங்கியிலுள்ள இந்நீதிமன்ற கணக்கில் பணத்தை வைப்பீடு செய்துவிட்டு இதே வழக்கு நடவடிக்கையில் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம் என்றும், அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றும், மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர் தன்னுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக மனு தாக்கல் செய்து முழுத்தொகையையும் பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணத்தை உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண். C.R.P.No.1343 of 2012 நாள். 02.06.2016 MD TNSTC Salem Ltd., Versus Chinnadurai

என்ற இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி 2ம் எதிர்மனுதாரர் TDS க்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.05.2020 ம் தேதி Tr. C.M.P.Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS General Insurance Company Limited //vs// Mr. Ayyannar.S and Others என்ற வழக்கில் வழங்கிய உத்தரவிக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

(இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்)

<u>செலவுத் தொகைப் பட்டியல்</u>

மனுதாரர்தரப்பு செலவுத் தொகை பட்டியல்	தொகை	
	ரூ.	பை.
நீதிமன்ற கட்டணம்	1122	50
வக்காலத்து கட்டணம்	10	00
நீ.ம.ஆ.கட்டணம்	25	00
வழக்கறிஞர் கட்டணம்	6500	00
சம்மன்படி	4	50
தட்டச்சு கூலி	100	00
மொத்தம்	7762	00

(இம்மனுவின் செலவுத்தொகையான ரூ.7762/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

என்னால் சுருக்கெழுத்தரிடம் வாய்மொழியாக சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்படடு பின் என்னால் சரிப்பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHURAMAN Digitally signed by MUTHURAMAN
Date: 2026.08.13 06:35:22 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,

தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, மன்னார்குடி.

பின் இணைப்பு:-

1. **மனுதாரர் தரப்பு சாட்சி**:-

ம.சா.1	தெய்வக்கனி	மனுதாரர்

2. **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**:-

ம.சா.ஆ.1	07.03.2022	முதல் தகவல் அறிக்கை - நகல்
ம.சா.ஆ.2	21.03.2022-24.03,2022	டிஸ்சார்ஜ் சம்மரி - நகல்
ம.சா.ஆ.3	11.03.2022	TN 48 AL 7711 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்
ம.சா.ஆ.4	03.06.2022	TN 50 AS 4178 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்
ம.சாஆ.5	13.07.2021-12.07.2022	காப்பீட்டு சான்று
ம.சாஆ.6	----	விபத்து சமயம் மற்றும் சிகிச்சையின்போது எடுக்கப்பட்ட நுண்கதிர் படம்

3. **நீதிமன்ற சான்றாவணம்**:-

நீ.ம.சா.ஆ.1	28.07.2025	திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ்

4. **சாட்சி தரப்பு சான்றாவணம்** :-

எ.ம.சா.1	கிஷோத்குமார்	வட்டார போக்குவரத்து அலுவலக உதவியாளர்

5. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-

சா.த.சா.ஆ.1	03.06.2022	TN 50 AS 4178 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்

MUTHURAMAN Digitally signed by MUTHURAMAN
Date: 2026.08.13 06:35:29 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை

தீர்ப்பாயநடுவர்/ சார்பு நீதிபதி, மன்னார்குடி.